TNED140052212022

Presented on : 28-09-2022
Registered on : 28-09-2022
Decided on : 11-08-2026
Duration : 3 years, 10 months, 13 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 26ம் நாள்
2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் செவ்வாய்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.703/2022**

மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பவானி காவல் நிலையம்,
பவானி.
(குற்ற எண். 120/2022). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

சந்திரா (55/2022)
க.பெ.தங்கவேல் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் உதவி ஆய்வாளர்,<br>பவானி காவல் நிலையம்,<br>பவானி.<br>(குற்ற எண். 120/2022). |
| 2. | எதிரி பெயர் | சந்திரா (55/2022)<br>க.பெ.தங்கவேல் |
| 3. | எதிரி முகவரி | க.எண். 4/534 SP நகர்,<br>குள்ளம்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம், ஈரோடு<br>மாவட்டம். |
| 4. | குற்ற நிகழ்வு நாள் | 24.03.2022 |
| 5. | புகார் தேதி | 24.03.2022 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | 24.03.2022 |
| 7. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 04.04.2022 |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:00:30 +0530

<table>
<tr><td>8.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Bail order in CMP 1037/2022 is allowed on 31.03.2022<br>U/s.239 Cr.PC petition filed in Crl.MP 5476/2022 and dismissed on 27.03.2023<br>U/s.315 Cr.PC petition filed in MP 01/2025 and allowed on 12.01.2026<br>U/s.254(2) Cr.PC petition filed in MP 02/2025 and Partly allowed on 09.10.2025</td></tr>
<tr><td rowspan="17">10.</td><td rowspan="17">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>27.06.2023</td><td>27.06.2023</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>27.06.2023</td><td>27.06.2023</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>11.07.2023</td><td>11.07.2023</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>17.07.2023</td><td>17.07.2023</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>11.09.2023</td><td>11.09.2023</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>16.10.2023</td><td>16.10.2023</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>23.01.2024</td><td>23.01.2024</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>04.03.2024</td><td>04.03.2024</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>06.05.2024</td><td>06.05.2024</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>19.08.2024</td><td>19.08.2024</td></tr>
<tr><td>அ.சா.11</td><td>17.10.2024</td><td>17.10.2024</td></tr>
<tr><td>அ.சா.12</td><td>13.11.2024<br>30.04.2025</td><td>13.11.2024<br>30.04.2025</td></tr>
<tr><td>அ.சா.13</td><td>09.05.2025</td><td>09.05.2025</td></tr>
<tr><td>அ.சா.14</td><td>09.05.2025</td><td>09.05.2025</td></tr>
<tr><td>எ.சா.1</td><td>09.12.2025</td><td>09.12.2025</td></tr>
<tr><td>எ.சா.2</td><td>09.12.2025</td><td>09.12.2025</td></tr>
<tr><td>11.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">10.05.2024</td></tr>
<tr><td>12.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">11.08.2026</td></tr>
<tr><td>13.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:00:36 +0530

இவ்வழக்கு கடந்த 28.09.2022ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II திருமதி, P.கயல்விழி அவர்களும், எதிரி தரப்பில் எதிரி தனக்குத் தானே ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்–</u>**

கடந்த 2013ல் குழந்தைவேல் என்பவரால் பாட்டப்பன் என்பவர் மீது அ.வ.எண்.147/13 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் 30.04.2014ம் தேதியில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வழக்கில் தரப்பினராக இல்லாத எதிரி பல்வேறு மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வந்த நிலையில், கடந்த 21.03.2022ம் தேதி அன்று நீதிமன்ற அலுவலகம் வந்த எதிரி, திருப்பப்பட்ட மனுக்களை திரும்ப பெறவேண்டி நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் சாட்சி சாந்தி என்பவரிடம் ரகளை செய்து வந்த நிலையில், 24.03.2022ம் தேதி மாலை 15.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பவானி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திலுள்ள PDM நீதிமன்ற தலைமை எழுத்தர் அறை முன்பாக உள்ள பொது இடத்தில் நின்று கொண்டு மேற்படி சாட்சியை பார்த்து, நீ மூடிகிட்டு உன்வேலையை பாரு என்றும், திருட்டு முண்டை போறாபாரு இவ எல்லாம் என்ன வேலை பாக்குறா என்று தகாத வாத்தையால் திட்டியுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சியை பார்த்து நீயெல்லாம் ஒரு பொம்பளையா, உருப்படமாட்ட நாசமாதான் போவேன்னு சொல்லி சாபமிட்டு கூச்சலிட்டும், நீதிமன்ற அலுவலர்கள் பணம் கேட்டதாக சொல்லி லஞ்ச ஒழிப்பு சிறப்பு துறைக்கு புகார் அனுப்பி விடுவேன் என்று சொல்லி மிரட்டி அலுவலக பணியை செய்ய விடாமல் நடந்து கொண்டுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சி மற்றும் திரு.ஆனந்த்பட் ஆகியோர்களை பார்த்து, வெளியில வா உன்ன பார்த்துக்கறேன் என்று சொல்லி மிரட்டியுள்ளார் என்றும், எனவே, எதிரி



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:00:40 +0530

இ.த.ச. பிரிவுகள் 294(b), 353, 506(i)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, பவானி காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது இ.த.ச.பிரிவு 294(b), 353, 506(i)ன் கீழும் குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எ.சா.1 மற்றும் எ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:—</u>

கடந்த 2013ல் குழந்தைவேல் என்பவரால் பாட்டப்பன் என்பவர் மீது அ.வ.எண்.147/13 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் 30.04.2014ம் தேதியில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வழக்கில் தரப்பினராக இல்லாத எதிரி பல்வேறு மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வந்த நிலையில், கடந்த 21.03.2022ம் தேதி அன்று நீதிமன்ற அலுவலகம் வந்த எதிரி, திருப்பப்பட்ட மனுக்களை திரும்ப பெறவேண்டி நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் சாட்சி சாந்தி என்பவரிடம் ரகளை செய்து வந்த நிலையில், 24.03.2022ம் தேதி மாலை 15.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பவானி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திலுள்ள PDM நீதிமன்ற தலைமை எழுத்தர் அறை முன்பாக உள்ள பொது இடத்தில் நின்று கொண்டு மேற்படி சாட்சியை பார்த்து, நீ மூடிகிட்டு உன்வேலையை பாரு என்றும், திருட்டு முண்டை போறாபாரு இவ எல்லாம் என்ன வேலை பாக்குறா என்று தகாத வாத்தையால் திட்டியுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சியை பார்த்து



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:00:44 +0530

நீயெல்லாம் ஒரு பொம்பளையா, உருப்படமாட்ட நாசமாதான் போவேன்னு சொல்லி சாபமிட்டு கூச்சலிட்டும், நீதிமன்ற அலுவலர்கள் பணம் கேட்டதாக சொல்லி லஞ்ச ஒழிப்பு சிறப்பு துறைக்கு புகார் அனுப்பி விடுவேன் என்று சொல்லி மிரட்டி அலுவலக பணியை செய்ய விடாமல் நடந்து கொண்டுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சி மற்றும் திரு.ஆனந்த்பட் ஆகியோர்களை பார்த்து, வெளியில வா உன்ன பார்த்துக்கறேன் என்று சொல்லி மிரட்டியுள்ளார்.

4.2 கடந்த 24.03.2022ம் தேதியன்று, மாலை அ.சா.13 சரவணன் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்தபோது, பவானி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிலைய கு.எண். 120/2022, இ.த.ச பிரிவு 294(b), 353, 506(i)ஆகிய பிரிவுகளின் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர், அ.சா.14 திருமதி. மகேஸ்வரி காவல் உதவி ஆய்வாளரிடம் மேற்படி வழக்கு கோப்பினை ஒப்புவித்ததாகவும், பின்னர், மேற்படி உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும், பின்னர் சம்பவயிட சாட்சிகளான சாந்தி, தலைமை எழுத்தர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, ஆனந்த பட், பெஞ்ச் கிளர்க், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, ஆடலரசன், உதவியாளர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, கலைசெல்வி, பெஞ்ச் கிளர்க், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, சரவணன், தலைமை எழுத்தர், நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பவானி, பிரபு, இளநிலை கட்டளைப் பணியாளர், நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பவானி ஆகியோர்களை விசாரித்து, தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.3 பின்னர், எதிரியை தேடியபோது அவர் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே நின்றிருந்தார், அவரை புகார்தாரர் சாந்தி அடையாளம் காட்ட எதிரியை விசாரித்தபோது அவர் தனது பெயர் மற்றும் முகவரியை கூறினார் என்றும், குற்றத்தை ஒப்புக் கொண்டவர், (குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை என எதிரி ஆட்சேபனை செய்தார்.) தான் கடலூர் பொதுப்பணித்துறையில் உதவி பொறியாளராக வேலை செய்து வருவதாக



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:00:47 +0530

கூறியும், எதிரி அரசு பணியாளர் என்பதால் கடலூர் பொதுப்பணித்துறை அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்தும், உச்ச நீதிமன்ற வழிக்காட்டுதலின்படி எதிரியை முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

4.4 பின்னர் 25.03.2022ம் தேதியன்று, சாட்சிகள் ராமசாமி, வழக்கறிஞர், பவானி, S.R.விஜயகுமார், வழக்கறிஞர், பவானி, N. கோவிந்தசாமி, வழக்கறிஞர், பவானி, குமரேசன், சிறப்பு உதவி ஆய்வாளர், ஆகியோர்களை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் திரு.செந்தில்குமார், System Officer, District Court, Erode அவர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, CCTV பதிவுகள் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 65(B) ன் கீழான சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றேன். பின்னர் கடலூர் மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பாளர் திருமதி.அமர்ஜோதி அவர்களையும் மற்றும் கோட்டப் பொறியாளர் திரு.சுந்தர் அவர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், பின்னர், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 11.06.2022 ம் தேதியன்று, எதிரி மீது இதச 294(b), 353, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது, எதிரி, காவல் துறை நான் கொடுத்த புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் என் மீது போலியான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். குழந்தைவேலு என்பவர் OS No.147/2013 போலியான ஆவணங்களை தயாரித்து பொய்யை சொல்லி உண்மையை மறைத்து தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது உண்டு என்று கூறினார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:00:52 +0530

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 294(b), 353, 506(i)ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 2013ல் குழந்தைவேல் என்பவரால் பாட்டப்பன் என்பவர் மீது அ.வ.எண்.147/13 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் 30.04.2014ம் தேதியில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வழக்கில் தரப்பினராக இல்லாத எதிரி பல்வேறு மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வந்த நிலையில், கடந்த 21.03.2022ம் தேதி அன்று நீதிமன்ற அலுவலகம் வந்த எதிரி, திருப்பப்பட்ட மனுக்களை திரும்ப பெறவேண்டி நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் சாட்சி சாந்தி என்பவரிடம் ரகளை செய்து வந்த நிலையில், 24.03.2022ம் தேதி மாலை 15.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பவானி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திலுள்ள PDM நீதிமன்ற தலைமை எழுத்தர் அறை முன்பாக உள்ள பொது இடத்தில் நின்று கொண்டு மேற்படி சாட்சியை பார்த்து, நீ மூடிகிட்டு உன்வேலையை பாரு என்றும், திருட்டு முண்டை போறாபாரு இவ எல்லாம் என்ன வேலை பாக்குறா என்று தகாத வாத்தையால் திட்டியுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சியை பார்த்து நீயெல்லாம் ஒரு பொம்பளையா, உருப்படமாட்ட நாசமாதான் போவேன்னு சொல்லி சாபமிட்டு கூச்சலிட்டும், நீதிமன்ற அலுவலர்கள் பணம் கேட்டதாக சொல்லி லஞ்ச ஒழிப்பு சிறப்பு துறைக்கு புகார் அனுப்பி விடுவேன் என்று சொல்லி மிரட்டி அலுவலக பணியை செய்ய விடாமல் நடந்து கொண்டுள்ளார் என்றும், மேலும், எதிரி, மேற்படி சாட்சி மற்றும் திரு.ஆனந்த்பட் ஆகியோர்களை பார்த்து, வெளியில வா உன்ன பார்த்துக்கறேன் என்று சொல்லி மிரட்டியுள்ளார் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:00:55 +0530

8. எதிரி தரப்பில் தனது வாதுரையில் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கு எதிரியால் தகாத வார்த்தையால் திட்டவில்லை என்றும், நீதிமன்ற ஊழியர்களின் அலுவலக பணியை செய்ய விடாமல் நடந்து கொள்ளவில்லை என்றும்,, மேற்படி காயங்கள் ஏற்படவில்லை என்றும், குற்ற மிரட்டல் விடுக்கவில்லை என்றும், ஆகவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதம் புரிந்தார்.

9. இவ்வழக்கில் அ.சா.1 திருமதி. சாந்தி புகார்தாரராகவும், அ.சா.2 திரு. ஆடலரசன், அ.சா.3 திருமதி.கலைசெல்வி, அ.சா.4 திரு. ராமசாமி, அ.சா.5 திரு. விஜயகுமார், அ.சா.6 திரு. கோவிந்தசாமி, அ.சா.7 திரு.ஆன்ந்த்பட், அ.சா.8 திரு. குமரேசன் கண்ணுற்ற சாட்சிகளாகவும், அ.சா.9 திரு. பிரபு பார்வை மகஜர் சாட்சியாகவும், அ.சா.10 திருமதி. அமரஜோதி, அ.சா.11 திரு. சுந்தர் கேள்விப்பட்ட சாட்சிகளாகவும், அ.சா.12 திரு. செந்தில்குமார் கணிணி அலுவலராகவும், அ.சா.13 திரு. சரவணன் மற்றும் அ.சா.14 திருமதி. மகேஸ்வரி புலன்விசாரணை அதிகாரியாக அரசு தரப்பில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளார்கள்.

10. <u>**எதிரி மீதான இ.த.ச.பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**</u>

**இ.த.ச பிரிவு 294(b)ன் கீழ் பின்வருமாறு கூறுகிறது.**

இ.த.ச 294(b) பிரிவை நிரூபணம் செய்ய கீழ்க்கண்ட உட்கூறுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்க்கு இடமின்றி நிருபணம் செய்யவேண்டும்.

a) The words or song recited uttered has to be obscene,
b) It should have been uttered in or near the public place,
c) It should have caused annoyance to the others.

10.1 அ.சா.1 திருமதி.சாந்தி பவானி உரிமையியல் நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் தனது சாட்சியத்தில், அ.வ.எண்.147/13 வழக்கிற்கு வழக்கு தரப்பினராக இல்லாத ஆஜர்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:00:59 +0530

எதிரி சந்திரா என்பவர் கடந்த 21.03.2022ம் தேதியன்று மேற்படி நீதிமன்ற தலைமை எழுத்தர் அறைக்கு வந்து தான் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த மனுக்கள் என்ன ஆனது என்று பார்க்கவேண்டும் என்றும் கூறியதாகவும், மனுக்களை நீதிமன்ற உதவியாளர் திரு.ஆடலரசன் என்பவரை எடுத்து சந்திராவிடம் தருமாறு கூறியதாகவும், அவரும் எடுத்து சந்திராவிடம் கொடுத்ததாகவும், மனுக்களை வாங்கி பார்த்த சந்திரா எப்படி இந்த மனுக்களை திருப்பமுடியும் என்று கேட்டு, சரியாக மனுக்களை பார்க்கமாட்டீர்களா என்றும், Returnயை இப்போதே Represent பன்னுகிறேன் என்றும் கூறிதாகவும், அதற்கு தான் Returnல் கையொப்பம் செய்து Represent செய்யுங்கள் என்று கூறியதாகவும், அதற்கு அவர் மனுக்களை பெற்றுக்கொண்டு, வெளியே சென்றுவிட்டு, Attended and Represented என்று எழுதி, Represent செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.2 மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், அவர் மனுக்களை நீதிபதி சரியாக பார்ப்பதில்லை என்றும், சரியான பிரிவுகளின் கீழ் மனு தாக்கல் செய்யுமாறு மேற்குறிப்புடன் மனுக்கள் திருப்பப்பட்டிருந்ததால், எந்த பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யவேண்டும் என்று நீங்கள் தான் கூறவேண்டும் என்று கூறி, தன்னிடம் வாக்குவாதம் செய்து தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும், தான் இப்படி சத்தம் போட்டு வாக்குவாதம் செய்தால், பணி நேரத்தில் தாங்கள் எவ்வாறு வேலை செய்வது என்றும், தங்கள் வேலையை நீங்கள் இடையூறு செய்யக்கூடாது என்றும் எடுத்து கூறியதாகவும், அதற்கு அவர் கூச்சலிட்டு தான் அப்படி தான் கேள்வி கேட்பேன் நான் கேட்கும் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று கூறி, சென்றுவிட்டார் என்றும், 23.03.2022ம் தேதியன்று மீண்டும் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த எதிரி அவரது மனுக்களை குறித்து தன்னிடம் கேட்டதாகவும், அதற்கு தான் பெஞ்ச் கிளார்க்கிடம் கேளுங்கள் என்று கூறினேன் என்றும்,அவர் பெஞ்ச் கிளார்க் திரு.ஆனந்த்பட்டுவிடம் சென்று மனுக்கள் குறித்து கேட்டபோது மேற்படி திரு.ஆனந்த்பட்டு அசல் வழக்கு பிரிவில் இருக்கும் பெஞ்ச் கிளார்க் திறந்த நீதிமன்றத்தில் இருப்பதால், அவர் வந்தவுடன் அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறினார் என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:01 +0530

10.3 மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், அசல் வழக்கு பிரிவில் உள்ள பெஞ்ச் கிளார்க் திருமதி.கலைச்செல்வி அவர்கள் மேற்படி மனுக்கள் மீண்டும் திருப்பப்பட்டு, அந்த மனுக்களை தன்னிடம் கொடுத்ததாகவும், தான் அந்த மனுக்களை திருப்பப்பட்ட மனுக்கள் வைக்கும் இடத்தில் வைத்ததாகவும், பிறகு எதிரி அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு மீண்டும் நீதிமன்ற அலுவலகம் வந்து மனுக்கள் குறித்து கேட்டதாகவும், எதிரியிடம் நீங்கள் அவரிடம் கேட்கக்கூடாது என்றும், தகுந்த பெஞ்ச் கிளார்க்கிடம்தான் கேட்கவேண்டும் என்றும் கூறியதாகவும், அதற்கு எதிரி நான் என்ன உங்கிட்டயா பேசினேன், நீ பேசக்கூடாது என்று தன்னிடம் ஒருமையில் பேசியதாகவும், அன்று நீதிபதி அம்மா விடுமுறையில் இருந்தார் என்றும், தான் எதிரியிடம் ஏன் இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள், முதலில் வெளியே செல்லுங்கள் என்று கூறினேன் என்றும், அதை கண்டுகொள்ளாத எதிரி மீண்டும் மீண்டும் தன்னிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும், அதனால் தான் நீதிமன்ற பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்களிடம் எதிரி தன்னை வேலை செய்யவிடாமல் சத்தம் போட்டுக்கொண்டிருப்பதாக வாய்மொழியாக புகார் அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

10.4 மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், பின்னர், உடனடியாக அங்கு வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியிடம் நீதிமன்றத்தில் வந்து இவ்வாறு சத்தம் போடக்கூடாது என்றும் உங்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்களை நீங்கள் வாங்கிக்கொண்டு செல்லுங்கள் என்றும் கூறினார் என்றும், எதிரி சிறப்பு உதவி ஆய்வாளரிடம் நீங்கள் எதற்காக இங்கு வந்து கேட்கிறீர்கள், உங்களுக்கும் இதற்கும் என்ன சம்மந்தம் என்றும் கூறி வாக்குவாதம் செய்து விட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மறுநாள் 24.03.2022அன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த எதிரி மீண்டும் மனுக்களை Represent செய்தார் என்றும், மனுக்களை சரிபார்த்து நீதிபதி அம்மாவிடம் கொடுத்தும், நீதிபதி அம்மா மனுக்களை பார்த்துவிட்டு, மனுக்களை Return செய்துவிட்டார் என்றும், Return செய்த மனுக்களை எதிரியிடம் கொடுத்ததற்கு தங்களிடம் பிரச்சனை செய்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், பின்னர், சத்தம் கேட்டு நீதிபதி அம்மா, திறந்த நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற அறைக்கு வந்தார் என்றும், நீதிபதி அம்மா மாடிப்படி ஏறும்போது, எதிரி படியில் இறங்கியதாகவும், அங்கேயே நீதிபதி அம்மா எதிரியிடம் ஏன்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:06 +0530

இவ்வாறு தகராறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நீதிபதி அம்மாவிடமும் எதிரி வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், நீதிபதி அம்மா உடனடியாக நீதிமன்ற அலுவலிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்களை அழைத்ததாகவும், நீதிபதி அம்மா தன்னை புகார் கொடுக்குமாறு கூறியதாகவும், தொடர்ந்து தகாத வார்த்தைகளால் பேசி, நீதிமன்ற பணியிலிருக்கும்போது, வாக்குவாதத்தில் ஈடுபட்டு நீதிமன்ற ஊழியர்களை பணி செய்யவிடாமல் மன உளைச்சலை ஏற்படுத்தி வந்ததால், நீதிபதி அம்மாவின் உத்தரவின்படி, எதிரி மீது தான் தட்டச்சு செய்த புகார் மனுவை 24.03.2022ம் தேதியன்று பவானி காவல்நிலையத்தில் கொடுத்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.5 அ.சா.2 திரு. ஆடலசரன் தனது சாட்சியத்தில், வழக்கில் வழக்கு தரப்பினராக இல்லாத ஆஜர் எதிரி சந்திரா மேற்படி அசல் வழக்கில் பல மனுக்களை தாக்கல் செய்தார் என்றும், அந்த மனுக்கள் நீதிமன்றத்தால் திருப்பப்பட்டது. கடந்த 21.03.2022அன்று சந்திரா நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து, தலைமை எழுத்தரிடம் திருப்பப்பட்ட மனுக்கள் குறித்து, நீங்கள் எவ்வாறு இந்த மனுக்களை Return செய்யலாம் என்று வாக்குவாதம் செய்து கொண்டிருந்ததாகவும், அதற்கு தலைமை எழுத்தர் மனுக்களை நாங்கள் Return செய்வதில்லை எனவும், நீதிபதி அம்மாதான் Return செய்கிறார் என்றும் கூறியதற்கு சந்திரா அது குறித்து எனக்கு தெரியாது, திருப்பப்பட்ட ஒவ்வொரு மனுக்களுக்கும் நீங்கள்தான் பதில் சொல்லவேண்டும் என்று கூறி தகராறு செய்ததாகவும், சந்திரா தலைமை எழுத்தரை ஒருமையில் பேசி திட்ட ஆரம்பித்து, தகாத வார்த்தைகளையும் திட்டினார் என்றும், "கடவுள் இருக்கிறார், அவர் பார்த்துக்கொள்வார், நீ எல்லாம் ஒரு பொம்பளையா, நீ நாசமாதான் போவ" என்று திட்டினார் என்றும், சத்தம் அதிகமாக கேட்டதால் அங்கிருந்த வக்கீல்கள் திரு.ராமசாமி மற்றும் திரு.விஜயகுமார் ஆகியோர்கள் வந்தனர் என்றும், S.S.I திரு.குமரேசன் அவர்களும் அங்கு வந்தும், S.S.I அவர்கள் சந்திராவிடம் ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நீங்கள் யார் இதை கேட்பதற்கு என்று அவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:08 +0530

10.6 மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், Return செய்த மனுக்களை Represent செய்வதற்காக, மீண்டும் 23.03.2022ம் தேதியன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்ததாகவும், Represent செய்த மனுக்களை சரிபார்த்து, தலைமை எழுத்தர் நீதிபதி அம்மா அவர்களிடம் கொடுத்ததாகவும், நீதிபதி அம்மா அந்த மனுக்களை பார்த்து மீண்டும் Return செய்தார் என்றும், அந்த மனுக்களை சந்திரா Return எடுக்கும்போது, தலைமை எழுத்தர் சற்று நேரம் வெளியில் இருங்கள், தாங்கள் சரிபார்த்துவிட்டு தருகிறோம் என்று கூறினார் என்றும், எதிரி தான் வெளியில் செல்லமாட்டேன், தான் வெளியில் சென்றால், ஏதாவது பேப்பரை நீங்கள் எடுத்துவிட்டால் என்ன செய்வது என்று கூறி, அரசு ஊழியர்களின் நாணயத்தை குறைத்து மதிப்பிடுமாறு பேசியதாகவும், மறுநாள் 24.03.2022அன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த சந்திரா, தலைமை எழுத்தரிடம் Return ஒவ்வொன்றிற்கும் காரணம் வேண்டும் என்று கேட்டதற்கு தலைமை எழுத்தர், நீதிபதி அம்மாவிடம்தான் கேட்கவேண்டும் என்றும், அவர்தான் Return செய்தார் என்றும் கூறியதாகவும், அதற்கு சந்திரா நீதிபதி இதை எல்லாம் ஒழுங்காக படிக்கமாட்டாரா, பார்க்கமாட்டாரா, இப்படிதான் Return செய்வாரா என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும், வாக்குவாதத்தின்போது சந்திரா தலைமை எழுத்தரிடம், உன் மீது லஞ்ச ஒழிப்பில் புகார் கொடுத்துவிடுவேன் என்று மிரட்டினார் என்றும், தலைமை எழுத்தர் நீதிமன்ற அலுவல் பணியில் இருந்தபோது, அவரை பணி செய்யவிடாமல் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு இடையூறு செய்து கொண்டிருந்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.7 மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், தலைமை எழுத்தர், நீதிபதி அம்மாவிடம் சென்று புகார் தெரிவித்ததாகவும், அப்போது, திறந்த நீதிமன்றத்திலிருந்த நீதிபதி அம்மா இது குறித்து விசாரிப்பதற்காக நீதிமன்ற அலுவலகத்திற்கு பெஞ்ச் கிளார்க்குடன் வந்ததாகவும், நீதிபதி அம்மா, மாடிப்படியில் மேலே ஏறி வரும்போது, சந்திரா படியில் கீழே இறங்கியபோது, அம்மா என்ன பிரச்சனை ஏன் சத்தம் போட்டு கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நீதிபதி அம்மாவிடம் சந்திரா எப்படி நீங்கள் எனது மனுக்களை Return செய்யலாம், எப்படி எனக்கு எதிராக தீர்ப்பு கூறலாம் என வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும், அப்போது சத்தம் கேட்டு, அருகிலிருந்த நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் அங்கு வந்துவிட்டதாகவும், S.S.I திரு.குமரேசன்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:12 +0530

அவர்களும் அங்கு வந்து, சந்திராவை அங்கிருந்து அழைத்து சென்றதாகவும், பிறகு நீதிபதி அம்மா அவர்களின் உத்தரவின்படி, தலைமை எழுத்தர், தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, மிரட்டி பணி செய்யவிடாமல் தடுத்த சந்திரா மீது பவானி காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.8 அ.சா.3 திருமதி.கலைச்செல்வி தனது சாட்சியத்தில், 21.03.2022ம் தேதியன்று மேற்படி எதிரி நீதிமன்ற தலைமை எழுத்தர் அலுவலகத்திற்கு வந்து, எதற்காக நான் போட்ட மனுக்களை Return செய்தாய் என்று ஒருமையில் அவரை மிரட்டும் தோரணையில் தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும், சத்தம் கேட்டு அருகிலிருந்த தானும், மற்ற நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் பார்த்தோம் என்றும், அதற்கு தலைமை எழுத்தர், எதற்காக இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என கேட்டதாகவும், எதிரி தன்னிடம் வந்து, எந்த பிரிவின் கீழ் நான் தாக்கல் செய்யும் மனுக்களை Return போடுகிறீர்கள் என கேட்டதாகவும், எவ்வாறு மனுக்களை தாக்கல் செய்யவேண்டும் என்று தன்னையும் மிரட்டும் தோரணையில் கேட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.9 மேலும், அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரி, நீங்கள் யார் உங்களிடம் நான் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது என்று SSI அவர்களிடம் கேட்டதற்கு SSI அவர்கள், நீதிமன்ற பணி நேரத்தில் இவ்வாறு ஊழியர்களை பணி செய்யவிடாமல் அவர்களது பணிக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேசக்கூடாது என கூறியதாகவும், 23.03.2022அன்று மீண்டும் நீதிமன்ற அலுவலகம் வந்த எதிரி தலைமை எழுத்தரிடம் திருப்பப்பட்ட மனுக்களை கொடுங்கள் என்று கேட்டபோதும் எதிரி, எதற்காக Return போடுகிறீர்கள் என்று கேட்டதாகவும், நீதிபதி அம்மாவிற்கு இதுவெல்லாம் தெரியாதா, எப்படி Return போடலாம் என்று எனக்கு தெரிந்து ஆகவேண்டும் என்று மிரட்டும் தோரணையில் தலைமை எழுத்தரை பேசி, தலைமை எழுத்தரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், எதிரி, தலைமை எழுத்தரிடம் பேசிவிட்டு, மாடிப்படியில் இறங்கும்போது சத்தம் கேட்டு, திறந்த நீதிமன்றத்தில் இருந்த நீதிபதி அம்மா அவர்களும், மாடிப்படியில் மேலே வந்ததாகவும், நீதிபதி அம்மா அவர்கள், எதிரியிடம் எதற்காக இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரி



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:15 +0530

எதற்காக எனது மனுக்களை Return செய்கிறீர்கள், அதற்கான காரணம் என்ன என்று நீதிபதி அம்மாவிடமும் சத்தமாக பேசியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.10 அ.சா.4 திரு. ராமசாமி தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2022ம் தேதி மதியம் 03.00மணி சுமாருக்கு தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி என்பவரிடம் திருப்பப்பட்ட மனுக்களை எவ்வாறு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று கேட்டு பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி தலைமை எழுத்தரிடம் சத்தம் போட்டு ஒருமையில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த மனுக்களை எந்த விதிமுறையின் கீழ் தாக்கல் செய்வது என்பதை நீங்கள்தான் சொல்லவேண்டும் என்று அலுவலக ஊழியரை மிரட்டும் தோணியில் கேட்டார் என்றும், அதற்கு தலைமை எழுத்தர் அவரிடம் எதுக்கு சத்தம் போடுகிறீர்கள், நீதிமன்ற அலுவலகத்தில் இவ்வாறு தரகுறைவாக நடந்துகொள்ளவேண்டாம் எனவும், நீதிமன்ற பணிக்கு இடையூறு செய்யவேண்டாம் எனவும் கேட்டார் என்றும், அதற்கு எதிரி நான் உன்னிடம் பேசவில்லை, நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு என்று ஒருமையில் திட்டியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.11 மேலும், அ.சா.4 தனது சாட்சியத்தில், அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது இவர்களுக்குள் எந்த வழக்கின் அடிப்படையில், என்ன தகராறு என்று தலைமை எழுத்தரிடம் கேட்டபோது, ஒரு குழந்தைவேல் என்பவர் பாட்டப்பன் என்பவர் மீது பவானி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.147/2013 வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கில் கடந்த 30.04.2014ம் தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், வழக்கில் தரப்பினர் அல்லாத திருமதி.சந்திரா அவர்கள் பல வருடங்களாக ஒவ்வொரு மனுவாக பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறார் என்றும், அந்த மனுக்கள் குறைபாடுகளின் காரணமாக திருப்பப்பட்டபோது, அலுவலக ஊழியரிடம் இதே மாதிரி சத்தம் போட்டு தகராறு செய்து மிரட்டி வருகிறார் என்றும், கடந்த 21.03.2022ம் தேதி திருப்பப்பட்ட மனுக்களை கேட்டு நீதிமன்ற ஊழியர் திரு.ஆனந்தபட்டு அவரிடம் கேட்டு என்ன காரணத்தினால் மனு திருப்பப்பட்டது, இதையெல்லாம் நீதிபதி கவனிக்காமல் கையெழுத்து செய்வாரா என்றும் கேட்டதற்கு அவர் பெஞ்ச் கிளார்க் கலைச்செல்வி திறந்த நீதிமன்றத்தில் பணியிலிருப்பதாகவும்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:19 +0530

அவரிடம் விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.12 மேலும், அ.சா.4 தனது சாட்சியத்தில், அலுவலக அறையிலிருந்து வெளியே வரும்போது, தலைமை எழுத்தர் அறையிலிருந்து வெளியே வந்த தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி அவர்களை பார்த்து எப்படி போறா பாரு, இவளையெல்லாம் கடவுள் சும்மா விடமாட்டாரு என்றும், திருட்டு முண்டை வெளியே வா உன்ன பார்த்துக்குறேன் என்றும் கூறிவிட்டு போய்விட்டதாகவும், அதனால் நீதிமன்ற பணியிலிருந்த தன்னை பலர் முன்னிலையில் திட்டியதால் தனக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது என்றும், நீதிமன்ற பணியினை தொடர்ந்து செய்ய விடாமல் தகராறு செய்து வருகிறார் என்றும் தன்னிடம் கூறியதாகவும், தலைமை எழுத்தர் அறையில் எதிரி போட்ட சத்தத்தை கேட்டு தகவல் தெரிந்து நீதிமன்ற தனி அறையிலிருந்த நீதிபதி அவர்கள் என்ன தகராறு என்று விசாரிப்பதற்காக, நீதிமன்ற அறையிலிருந்து தலைமை எழுத்தர் அறைக்கு வருவதற்கு மாடிப்படி வழியாக மேலே வரும்போது, எதிரி அவர்கள் நீதிபதியிடம் சத்தம் போட்டு தகராறு செய்ததாகவும், அப்போது நீதிமன்ற பணியிலிருந்த பவானி காவல்நிலைய உதவி ஆய்வாளர் மற்ற காவலர்கள் அங்கு வந்து நீங்கள் யார், எதற்காக தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அதைகேட்க நீங்கள் யார் என்று சத்தம் போட்டு கொண்டிருந்ததாகவும், அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து போலீசார் அனுப்பிவிட்டார்கள் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.13 அ.சா.5 திரு.எஸ்.ஆர். விஜயகுமார் தனது சாட்சியத்தில், தலைமை எழுத்தர் அறையில் எழுந்த சத்தத்தை கேட்டு தானும், தன்னுடன் இருந்த ராமசாமி என்பவரும் சென்று பார்த்தபோது ஒருவர் தலைமை எழுத்தர் திருமதி.சாந்தியிடம் கடந்த 24.03.2022அன்று தகாத வார்த்தைகளில் பேசிக்கொண்டும், அவரிடம் சண்டையிட்டும் அவரை பணி செய்யவிடாமல் தடுத்து கொண்டிருந்ததாகவும், தாங்கள் தலைமை எழுத்தர் திருமதி.சாந்தியிடம் யார் அவர், எதற்காக சத்தம் போடுகிறார் என்று கேட்டபோது, 2013ம் ஆண்டு தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.147/2013 என்ற எண்ணில் உள்ள தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அவர் பெயர் சந்திரா என்றும் தெரிவித்தார் என்றும், எதிரி



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:21 +0530

தொடர்ந்து நீதிமன்ற தலைமை எழுத்தர் அலுவலகத்தில் கூச்சலிட்டுக்கொண்டும், அலுவலர்களை மிரட்டும் தோணியிலும் நடந்து கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த பவானி காவல்துறை உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் என்பவர் இங்கு இவ்வாறு செய்யக்கூடாது, எதுவா இருந்தாலும் நீதிமன்றத்தில் பேசிக்கொள்ளுங்கள் என்று கூறியதாகவும், அவரையும் மிரட்டும் தோணியில் எதிரி நடந்து கொண்டதாகவும், அலுவலகத்தில் நடந்த பிரச்சனைகளை கேள்விபட்டு உரிமையியல் நீதிபதி அவர்கள் அலுவலகத்திற்கு வரும்போது எதிரில் படிக்கட்டில் வந்த எதிரி நீதிபதியை பார்த்து நீ எல்லாம் ஒழுங்கா வேலை செய்வதில்லை என்றும் மிரட்டும் தோணியில் கூச்சலிட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.14 அ.சா.6 திரு. கோவிந்தசாமி தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2022அன்று மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தாளர் திருமதி.சாந்தி பணிபுரியும் அலுவலக பகுதியிலிருந்து அதிகமாக சத்தம் கேட்டதால், சென்று பார்த்தபோது, எதிரி மேற்படி தலைமை எழுத்தரை பணி செய்ய விடாமல் தகாத வார்த்தையில் திட்டிக்கொண்டு வளாகத்தில் நடந்து கொண்டிருந்ததாகவும், தானும், மற்ற வழக்கறிஞர்களும் எதிரியிடம் பணியிலிருக்கும் அரசு அலுவலரிடம் தகாத வார்த்தைகளில் பேசக்கூடாது என்றும், எதுவா இருந்தாலும் முறைப்படி பேசிக்கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினோம் என்றும், எதிரி அதை பொருட்படுத்தாமல் மீண்டும் எழுத்தரிடம் நீயெல்லாம் ஒரு பொம்பளையா உருப்படியாகமாட்டாய் என்று சத்தம் போட்டபோது, தான் யார் இவர் எதற்காக நீதிமன்ற அலுவலரிடம் இவ்வாறு தகாத வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கிறார் என்று திருமதி.சாந்தியிடம் கேட்டதற்கு எதிரி தன்னிடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.147/2013 என்ற வழக்கு கொளந்தவேல் என்பவர் பாட்டப்பன் மீது தாக்கல் செய்திருந்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.15 மேலும், அ.சா.6 தனது சாட்சியத்தில், அவ்வழக்கு கடந்த 30.04.2014ல் தீர்ப்பாகி விட்டது என்றும், மேற்படி அசல் வழக்கில் தரப்பினராக இல்லாத எதிரியை அவர் தாக்கல் செய்த மனுக்கள் ரிட்டர்ன் ஆனது குறித்து நீதித்துறை அலுவலரிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வருவதாக கூறியும், அன்றைய தினம் 23.02.2022ல் திருப்பப்பட்ட



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:25 +0530

மனு குறித்து விவாதம் செய்து எதற்காக மனுவை ரிட்டர்ன் போட்டீர்கள் என்று தகராறு செய்வதாகவும், தலைமை எழுத்தர் அவரது அலுவலகத்திற்கு எதிரில் உள்ள கழிவறைக்கு செல்லும்போது நீயெல்லாம் ஒரு பொம்பளையா, உன்னை வெளியே வா பார்த்துக்கொள்கிறேன் என்றும், காவல் உதவி ஆய்வாளரும் வந்து நீதிமன்ற பணியாளரிடம் தகாத முறையில் பேசக்கூடாது என்று எச்சரிக்கை செய்தபோது காவல் உதவி ஆய்வாளரை பார்த்து உன்னை யார் என்னை கேள்வி கேட்க, நீங்கள் அமைதியாக சென்றுவிடுங்கள் என்று அவரையும் மிரட்டும் தோணியில் பேசி, சத்தம் போட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.16 அ.சா.7 ஆனந்த்பட் தனது சாட்சியத்தில், கடந்த 21.03.2022 தேதியன்று தான் தனது அறையில் பணியில் இருந்த போது தலைமை எழுத்தர் அறையில் இருந்து சத்தம் வந்ததாகவும், அப்போது பணியில் இருந்த தலைமை எழுத்தரை பார்த்த எதிரி, நீங்கள் நல்லாவே இருக்க மாட்டீங்க கடவுள் இருக்கிறார் பார்த்துக்குவார் என்று சொல்லிவிட்டு தான் அமர்ந்திருக்கும் பிரிவிற்கு வந்ததாகவும், அங்கு வந்து அசல் வழக்குகளை பார்க்கும் பலகை எழுத்தரிடம் எதற்காக மனுவை ரிட்டன் செய்திர்கள் என்று மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், பிறகு தலைமை எழுத்தர் வந்து இங்கு சத்தம் போடக்கூடாது என்று கூறி எதிரியை அனுப்பி வைத்துவிட்டதாகவும், அப்போது சென்று விட்ட எதிரி மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து 23.03.2022 தேதியன்று நீதிமன்ற தலைமை எழுத்தர் அறைக்கு வந்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.17 மேலும், அ.சா.7 தனது சாட்சியத்தில், நீங்கள் மீண்டும் ரிட்டன் செய்தால் நீங்கள் எழுதும் ஒவ்வொரு காரணத்திற்கு எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்று கூறி மனுவினை தாக்கல் செய்ததாகவும், அதற்கு தலைமை எழுத்தர் எதிரியிடம் நீங்கள் சற்று வெளியில் இருங்கள் என்றும் தான் மனுக்களை சரிபார்த்துவிட்டு திரும்ப உங்களை அழைக்கிறேன் என்று கூறியதாகவும், நான் இங்கிருந்து செல்லமாட்டேன் என்றும், அவ்வாறு நான் சென்றால் நீங்கள் நான் தாக்கல் செய்த மனுவிலிருந்து எதாவது ஒரு பேப்பரை கிழித்து எறிந்து விடுவீர்கள் அல்லது தூக்கி வெளியே வீசி விடுவீர்கள் என்று கூறியதாகவும், நீதிபதி அம்மா அலுவலக அறைக்கு வருவதற்க்காக படியில் மேல் ஏறி வந்தார் அப்போது எதிரி அதே படியில் கீழே இறங்கியபோது, நீதிபதி



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:28 +0530

அம்மாவிடமும் மேற்படி மனு ரிட்டன் செய்தது தொடர்பாக வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.18 அ.சா.8 திரு.குமரேசன் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் திருமதி. சாந்தியிடம் எதிரி, நீயெல்லா ஒரு பொம்பளையா, உருப்படமாட்ட, நாசமாகத்தான் போவ எனக் கூறி சாபமிட்டு நீதிமன்ற ஊழியர்களை பணி நேரத்தில் அவரது அலுவலக பணிகளை செய்யவிடாமல் சத்தம் போட்டு கொண்டிருந்தார் என்றும், திருமதி. சாந்தியிடம் எதிரி, நீயெல்லா ஒரு பொம்பளையா, உருப்படமாட்ட, நாசமாகத்தான் போவ எனக் கூறி சாபமிட்டு நீதிமன்ற ஊழியர்களை பணி நேரத்தில் அவரது அலுவலக பணிகளை செய்யவிடாமல் சத்தம் போட்டு கொண்டிருந்தார் என்றும், தான் எதிரியிடம் நீதிமன்ற அலுவலகத்தில் எல்லாம் இவ்வாறு சத்தம் போடக்கூடாது என்றும், அசிங்கமாக பேசக்கூடாது என்றும், எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தில் தான் சொல்ல வேண்டும் என்று கூறியதாகவும், ஆனால் தான் கூறியதை எதிரி கேட்காமல் சத்தம் போட்டு பிரச்சனை செய்து அவர்களை வேலை செய்ய விடாமல் தடுத்து கொண்டிருந்ததாகவும், அங்கிருந்த அந்நீதிமன்ற ஊழியர் ஆன்ந்த் பட் என்பவரிடம் தான் கொடுத்த மனுக்களை எல்லாம் நீங்கள் எப்படி ரிட்டன் செய்யலாம் என்று தகராறு செய்து கொண்டிருந்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.19 மேலும், அ.சா.8 தனது சாட்சியத்தில், தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி மீண்டும் எதிரியிடம் இவ்வாறு சத்தம் போட்டு தகராறு செய்யக்கூடாது என்று கூறியதற்கு எதிரி, நீ வாயை மூடிக்கொண்டு உன் வேலையை பார் என்று கெட்ட வார்த்தைகளால் அவரை திட்டினார் என்றும், 2013–ல் குமரவேல் என்பவர் பாட்டப்பன் மீது தாக்கல் செய்த வழக்கு தொடர்பாக நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்று தகராறு செய்து கொண்டதாகவும், கடவுள் இருக்கிறார் அவர் உங்களை எல்லாம் பார்த்துக்கொள்வார் என்று ஒருமையில் அலுவலக பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை பணி நேரத்தில் பணி செய்யவிடாமல் அலுவலகத்தில் கூச்சலிட்டு கொண்டிருந்ததாகவும், தலைமை எழுத்தர் சாந்தி எதற்காக தினமும் இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என்று எதிரியிடம் கேட்டதாகவும், அப்போது எதிரி நீ வாயை மூடிக்கொண்டு வேலை பார் என்று கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:32 +0530

10.20 மேலும், அ.சா.8 தனது சாட்சியத்தில், தலைமை எழுத்தர் சாந்தி திருப்பப்பட்ட மனுக்களை சரிபார்த்து விட்டு உங்களிடம் தருகிறோம் என்று அது எதிரி நீங்கள் வெளியில் காத்திருக்குமாறும் எதிரியிடம் கூறினார் என்றும், அதற்கும் எதிரி தகாத வார்த்தைகளால் பேசி கூச்சலிட்டதாகவும், அப்போது அலுவலக அறையில் இருந்து வெளியே நின்று கொண்டிருந்த தலைமை எழுத்தரை எதிரி திருட்டு முண்டை போறா பாரு இவள் எல்லாம் என்ன வேலை பார்க்குறா என்று தகாத வார்த்தைகளால் பேசிக் கொண்டு நீ வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று எதிரி மிரட்டியதாகவும், இதில் உள்ள விபரங்கள் ஒவ்வொன்றையும் தெளிவாக சொல்ல வேண்டும் என்றும், மீண்டும் தலைமை எழுத்தர் மற்றும் அந்நீதிமன்ற ஊழியர்களிடம் பிரச்சனை செய்தார் என்றும், இவற்றை எல்லாம் பார்த்த தான் அலுவலக நேரத்தில் வந்து ஊழியர்களை அலுவலக பணி செய்யவிடாமல் இவ்வாறு எல்லாம் பிரச்சனை செய்யாதீர்கள் என்று கூறியதற்கு எதிரி தன்னிடம் நீ பேசாதே உன்னிடம் எதுவும் கேட்கவில்லை என்று மிரட்டும் தோரணையில் என்னை சத்தம் போட்டதாகவும், அங்கிருந்த ஊழியர்கள் நீதிபதி அம்மாவிடம் எதிரி தகராறு செய்வதை சொன்னார்கள் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.21 மேலும், அ.சா.8 தனது சாட்சியத்தில், தான் உம்மிடம் இப்படியெல்லாம் நீதிமன்ற அலுவலகத்தில் சத்தம் போடக்கூடாது என்று அறிவுரை கூறி அவரை வெளியில் கூட்டி வந்ததாகவும், அடிக்கடி நீதிமன்றம் வரும் எதிரி நீதிபதிகளை ஒருமையில் திட்டுவதும், நீதிமன்ற ஊழியர்களை தகாத வார்த்தைகளில் பேசுவதும் வழக்கமாக கொண்டிருந்ததாகவும், இது குறித்து நீதிபதி அம்மா உம்மை திறந்த நீதிமன்றத்திற்கு அழைத்து எச்சரிக்கை செய்த போது எதிரி தொடர்ந்து மேற்படி பிரச்சனை செய்துவந்ததாகவும், இது குறித்து யாராவது தன்னை கேட்டால் உயர் நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றத்தில் அவர்கள் மீது பணம் கேட்டதாக சொல்லியும் புகார் அளித்தும், லஞ்ச ஒழிப்பு துறைக்கு புகார் அனுப்பி விடுவேன் என்று மிரட்டுவதாக தலைமை எழுத்தர் தன்னிடம் கூறியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.22 அ.சா.9 பிரபு தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2022ம் தேதியன்று மாலையில் சம்பவயிடத்திற்கு வந்த போலீசார் சம்பவம் குறித்து விசாரித்து மாதிரி வரைபடம், பார்வை



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:35 +0530

மகஜர் தயார் செய்து, அதில் தன்னிடம் கையொப்பம் போடும்படி கேட்டதால் தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.23 அ.சா.10 அமரஜோதி தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2022ம் தேதியன்று பவானி காவல் நிலைய உதவி ஆய்வாளர், தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எதிரி சந்திரா மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்துள்ளதாக கூறியதாகவும், மேலும், அவர் ஏதேனும் அலுவலகத்தில் விடுமுறை சொல்லி சென்றுள்ளாரா என்று கேட்டதற்கு அவர் அலுவலகத்திற்கு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்ததாகவும், அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக தனக்கு தெரிவித்ததாகவும் என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.24 அ.சா.11 சுந்தர் தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2022ம் தேதி இரவு 7.00 மணியளவில் காவல் நிலைய அதிகாரி அலைபேசியில் அழைத்து உதவி பொறியாளர் உம்மை (சந்திர அவர்களை) கைது செய்துள்ளதாக கூறினார் என்றும், 25.03.2022 தேதி முதல் தகவல் அறிக்கையின் நகல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பட்டதாகவும், மேற்படி தான் நெடுஞ்சாலை துறை முதன்மை இயக்குநருக்கு தெரியப்படுத்தியதாகவும், நன்னடத்தை விதிகள் 17 (E) படி பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும், அன்றைய தினம் அவர் விடுப்பு எதுவும் பெறவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.25 அ.சா.12 செந்தில்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 27.04.2022 ம் தேதியிட்ட மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களின் செயல்முறை ஆணை A.No.171/2022, D.No.3512/2022ன் படி தான் மாண்பமை பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அலுவலகத்தில் உள்ள CCTV யின் பதிவான 21.03.2022 முதல் 24.03.2022 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை பதிவான நிகழ்வுகளை 6 DVD களில் பதிவிறக்கம் செய்து அதனுடன் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65 ன் கீழான சான்றிதழுடன் மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களிடம் ஒப்படைத்தேன். அதனை மாண்பமை நீதிபதி அவர்கள் 23.08.2022 தேதியிட்ட



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:38 +0530

செயல்முறை ஆணை A.No.171/2022, D.No.6781/2022 ன் படி புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தார். மேற்கண்ட 6 DVD கள் அ.சா.ஆ.3 ஆகவும், இந்திய சாட்சிய சட்டப் பிரிவு கீழான சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டதாக கூறி சாட்சியமளித்துள்ளார்.

10.26 மேற்படி பிரிவின் படியும் மற்றும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரீசிலனை செய்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் தகாத வார்த்தை என்று தான் சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.2 தனது சாட்சியத்தில் நீ எல்லாம் பொம்பளையா, நீ நாசமாகதான் போவ என்று திட்டினார் என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரி தகாத வார்த்தை பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.4 தனது சாட்சியத்தில், அவர் அலுவலக அறையிலிருந்து வெளியே வரும்போது, தலைமை எழுத்தர் அறையிலிருந்து வெளியே வந்த தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி அவர்களை பார்த்து எப்படி போராபாரு இவளை எல்லாம் கடவுள் சும்மா விட மாட்டார் என்றும், திருட்டு முண்டை வெளியே வா உன்னை பார்த்துக்குறேன் என்றும் கூறிவிட்டு போய்விட்டதாகவும், அதனால், நீதிமன்ற பணியிலிருந்து என்னை பலர் முன்னிலையில் திட்டியதால், எனக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது என்றும், நீதிமன்ற பணியினை தொடர்ந்து செய்யவிடாமல் தகராறு செய்து வருகிறார் என்று என்னிடம் கூறினார் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.4 சம்பவத்தை பார்க்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. அ.சா.5 தனது சாட்சியத்தில், எதிரி தகாத வார்த்தைகளால் தான் பேசிக்கொண்டிருந்தார் என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.6 தனது சாட்சியத்தில் எதிரி தகாத வார்த்தைகளால் தான் பேசிக்கொண்டிருந்தார் என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. அ.சா.7 தனது சாட்சியத்தில் எதிரி தகாத வார்த்தை பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. அ.சா.8 தனது சாட்சியத்தில் அலுவலக அறையில் இருந்து வெளியே நின்று கொண்டிருந்த தலைமை எழுத்தரை எதிரி



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:41 +0530

திருட்டு முண்டை போறா பாரு இவள் எல்லாம் என்ன வேலை பார்க்குறா என்று தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டு, நீ வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று எதிரி மிரட்டினார் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 தனது சாட்சியத்தில் எதிரி தகாத வார்த்தைகளால் தான் பேசிக்கொண்டிருந்தார் என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.27 மேற்படி பிரிவின் உட்பிரிவு a மற்றும் b அரசுத்தரப்பில் நிருபணம் செய்யப்பட்டுள்ளது. உட்பிரிவு நிருபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1, 2, 3, 5, 6, 7 எதிரி தகாத வார்த்தை பேசியதாகத்தான் சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால் என்ன தகாத வார்த்தை பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.5 தனது சாட்சியில், எதிரி அ.சா.1 யை தகாத வார்த்தையால் திட்டியதாகவும், அதனால் அ.சா.1க்கு அவமானம் ஏற்பட்டது என அ.சா.1 கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.5 சம்பவத்தை பார்த்தாரா இல்லையா என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும் அ.சா.8 தனது சாட்சியத்தில், திருட்டு முண்டை என குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருந்தாலும், எதிரி கூறியதால் தனக்கு அறுவறுக்கும் வகையில் இருந்ததாக (annoyance) எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி உட்பிரிவு C ஆன தகாத வார்த்தை மூன்றாம் நபருக்கு தொல்லையோ, தொந்தரவோ ஏற்படுத்த வேண்டும் என்பது சாரம்சம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்க்கு இடமின்றி நிருபணம் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10.28 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 1996(1) CTC 470 in the case of K.Jeyaramanuju Vs. Janakaraj & anr., என்கிற வழக்கில் பின்வருமாறு கூறுகிறது.

"To prove the offence under Section 294 of IPC mere utterance of obscene words are not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in the case." மேற்படி தீர்ப்பு இந்த வழக்கிற்கு பொருந்தும் வகையில் உள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:45 +0530

10.29 மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையிலும், மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையயிலும், இ.த.ச. பிரிவு 294(b) சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே முடிவு செய்கின்றது.

11. <u>எதிரி மீதான இ.த.ச.பிரிவு 506(i)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>

**இ.த.ச பிரிவு 506(i) ன் கீழ் பின்வருமாறு கூறுகிறது.**

1.The accused threatened another person.
2.That such threat consisted of some injury to his person, reputation or property; or to the person, reputation or property of someone in whom he was interested.
3. The accused must have the intention of causing alarm to the victim.
4. The threat must be intended to induce the victim to do something they are not legally obligated to do or to omit doing something they are legally bound to do

11.1 மேற்படி பிரிவின் படி பரிசீலனை செய்கையில், எதிரி, சாந்தி மற்றும் ஆனந்தபட் ஆகியோர்களை நீ வெளியே வா நான் உன்னை பார்த்துக்கிறேன் என குற்றmuru மிரட்டல் விடுத்தாரா என பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 சாந்தி மற்றும் அ.சா.7 ஆனந்தபட் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், குற்ற மிரட்டல் எதிரி விடுத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 திரு. ஆடலரசன், அ.சா.3 திருமதி.கலைசெல்வி, அ.சா.5 திரு. விஜயகுமார், அ.சா.6 திரு. கோவிந்தசாமி, அ.சா.9 திரு. பிரபு தங்களது சாட்சியத்தில், எதிரி குற்ற மிரட்டல் விடுத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.2 மேலும், இவ்வழக்கில் அ.சா.4 தனது சாட்சியத்தில், அவர் அலுவலக அறையிலிருந்து வெளியே வரும்போது, தலைமை எழுத்தர் அறையிலிருந்து வெளியே வந்த தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி அவர்களை பார்த்து எப்படி போராபாரு இவளை எல்லாம் கடவுள் சும்மா விட மாட்டார் என்றும், திருட்டு முண்டை வெளியே வா



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:01:47 +0530

உன்னை பார்த்துக்குறேன் என்றும் கூறிவிட்டு போய்விட்டதாகவும், அதனால், நீதிமன்றபணியிலிருந்து என்னை பலர் முன்னிலையில் திட்டியதால், எனக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது என்றும், நீதிமன்ற பணியினை தொடர்ந்து செய்யவிடாமல் தகராறு செய்து வருகிறார் என்றும் என்னிடம் கூறினார் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.4 சம்பவத்தை பார்க்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. மேலும் அ.சா.4 தனது சாட்சியம் கேள்வி நிலை சாட்சியமாகவே அமைந்துள்ளது. மேலும், அ.சா.8 தனது சாட்சியத்தில், அலுவலக அறையில் இருந்து வெளியே நின்றுகொண்டிருந்த தலைமை எழுத்தரை எதிரி திருட்டு முண்டை போரா பாரு இவள் எல்லாம் என்ன வேலை பார்க்கிறா என்று தகாத வார்த்தையால் பேசிக்கொண்டு நீ வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என சாட்சியமளித்துள்ளார்.

11.3 மேற்படி சாட்சிங்களை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களே குற்ற மிரட்டல் விடுத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், கண்ணுற்ற சாட்சியை விட வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களே முதன்மையானதும், அந்த சாட்சிகளின் சாட்சியத்தின் வலிமை அதிகம் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும், இந்த வழக்கின் அ.சா.8 எதிரி தலைமை எழுத்தரை பார்த்து வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என மட்டும்தான் கூறியுள்ளார். மேற்படி எதிரி கூறியதற்கு பின்பு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.4 குற்ற அச்சுறுத்தல் குற்றச்சாட்டை நிலைநிறுத்த எதிரி தகாத வார்த்தைகள் பேசுவதும், அல்லது வெறுமனே அச்சுறுத்தும் சொற்களை பயன்படுத்துவது மட்டும் போதுமானது அல்ல, பாதிக்கப்பட்டவரின் மனதில் உண்மையான பயத்தையோ அல்லது கலக்கத்தையோ ஏற்படுத்தியிருக்க வேண்டும். மேலும், எதிரி வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று மட்டும்தான் கூறியுள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:51 +0530

11.5 வெறும் கோபத்தில் பேசும் வார்த்தைகள், வசைபாடுதல் அல்லது "உன்ன பாத்துக்குறேன்" என்று பொதுவாகக் கூறுவது மட்டும் குற்றவியல் மிரட்டல் ஆகாது. அது பாதிக்கப்பட்டவர் மனதில் உண்மையான பயத்தை/அச்சத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அ.சா.1 தனது சாட்சியத்தில் இ.த.ச பிரிவு 506(i) தொடர்பான எந்தவொரு மிரட்டலையும் கூறவில்லை. எதிரி தன்னை மிரட்டியதாகவும், அதனால் தான் அச்சமடைந்ததாகவும் அவர் சாட்சியமளிக்கவில்லை. அ.சா.4 எதிரி மிரட்டியதை நேரடியாகக் கேட்கவில்லை. அ.சா.1 தன்னிடம் கூறியதாகவே கூறுகிறார். அ.சா.4 சாட்சியத்தின்படி, அ.சா.1 "அவமானம்" அடைந்ததாகவே கூறியுள்ளார், மாறாக உயிருக்கோ உடலுக்கோ "பயம்/அச்சம்" ஏற்பட்டதாகக் கூறவில்லை. உச்சநீதிமன்றம் (*Manik Taneja v. State of Karnataka*) வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளின்படி, ஒரு வாக்குவாதத்தின் போது "உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று பொதுவாகக் கூறுவது, எதிரியை காயம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கூறப்படாத வரை மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு பயத்தை ஏற்படுத்தாத வரை, இ.த.ச பிரிவு 506ன் கீழ் குற்றமாகாது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எதிரிக்கு குற்றவியல் மிரட்டல் விடுக்கும் நோக்கம் (Mens Rea) இருந்ததாகவோ, அதனால் அ.சா.1 மனதில் பயம் உருவானதாகவோ அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

11.6 மேலும், வாய்மொழி சண்டை என்பது ஆத்திரத்தில் பேசப்படும் கெட்ட வார்த்தைகளோ அல்லது திட்டுகிறதையோ பயமுறுத்தும் நோக்கம் இல்லாத பட்சத்தில் இ.த.ச பிரிவு 506(i)ன் கீழ் வராது என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. மேலும், அதன் அடிப்படையில், ஆத்திரத்தில் அல்லது வாய்மொழி தகராறு பேசப்படும் வார்த்தைகளோ அல்லது வெறுமனேயான அச்சுறுத்தல் சொற்கள் தானாக இ.த.ச பிரிவு 506(i)ன் கீழ் உள்ள குற்ற அச்சுறுத்தல் ஆகாது. மேலும், இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், எதிரி புகார்தாரரை நோக்கி சில கோபமான வார்த்தைகளை பேசியதாகவும், மேலும், வெளியே வா பார்த்துக்கொள்ளலாம் என மனதில் உண்மையான அச்சத்தையோ பயத்தையோ ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிரி செயல்பட்டார் என்பதையோ அல்லது அந்த அச்சுறுத்தலினால் புகார்தாரர் சட்டப்பூர்வமான செயலில் செய்ய முடியாமல் பயந்தார் என்பதை அரசு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:53 +0530

தரப்பில் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் தாக்கல் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

எனவே, மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் இ.த.ச. பிரிவு 506(i) சந்தேகத்திற்க்கு இடமின்றி நிருபணம் செய்யப்படவில்லை என்றே முடிவு செய்கின்றது.

12. **<u>எதிரி மீதான இ.த.ச.பிரிவு 353ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 353ன் கீழ் பின்வருமாறு கூறுகிறது.**

இ.த.ச பிரிவு 353ன் கீழ் ஒருவரை குற்றவாளியாகத் தீர்மானிக்க பின்வரும் கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்:

(i) பாதிக்கப்பட்டவர் ஒரு அரசு ஊழியராக (Public Servant) இருக்க வேண்டும்.

(ii) அவர் தனது சட்டப்பூர்வமான கடமையைச் செய்யும் போது இச்சம்பவம் நடந்திருக்க வேண்டும்.

(iii) எதிரி அவர் மீது தாக்குதல் (Assault) அல்லது குற்றவியல் விசை (Criminal Force) பிரயோகித்திருக்க வேண்டும்.

(iv) அரசு ஊழியரை அவரது பணியைச் செய்யவிடாமல் தடுக்க வேண்டும் என்ற குறிப்பிட்ட குற்ற நோக்கம் (Mens Rea) எதிரிக்கு இருந்திருக்க வேண்டும்.

12.1 மேற்படி பரிவின்படி பரிசீலனை செய்கையில், அ.சா.1 இ.த.ச பிரிவு 21ன் கீழ் பொது உழியர் (Public Servant) என்கிற வரையறைக்குள் வருகிறார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அரசுத் தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை விரிவாகப் பரிசீலிக்கும்போது, எதிரி நீதிமன்ற அலுவலகத்தில் "சத்தம்போட்டு வாக்குவாதம் செய்தார்", "கூச்சலிட்டார்" மற்றும் "ஒருமையில் பேசினார்" என்பதாக மட்டுமே சாட்சியமளித்துள்ளனர்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:57 +0530

12.2 அரசு தரப்பு சாட்சிகள் எவரும் எதிரி அ.சா.1 (தலைமை எழுத்தர்) மீதோ அல்லது மற்ற ஊழியர்கள் மீதோ எவ்விதமான உடலளவிலான தாக்குதலையோ (Physical Assault) அல்லது குற்றவியல் விசையையோ (Criminal Force) பயன்படுத்தியதாகச் சாட்சியளிக்கவில்லை. வெறுமனே உரத்த குரலில் பேசுவதோ, கூச்சலிடுவதோ அல்லது சத்தமிட்டு வாக்குவாதம் செய்வதோ இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 351 மற்றும் 350-ன் கீழ் "தாக்குதல்" அல்லது "குற்றவியல் விசை" என்ற வரம்பிற்குள் வராது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.3 அ.சா.1, அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோரின் குறுக்கு விசாரணையிலிருந்து, எதிரி தாக்கல் செய்த மனுக்கள் முறையான படிவத்தில் கோர்வையாக இல்லாத காரணத்தினால் அவை திருப்பி அனுப்பப்பட்டன (Returned) என்பதும், அம்மனுக்களைப் பெறுவதற்கும் அதனை எண் (Number) செய்யக் கோருவதற்கும் எதிரி நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்பதும் தெளிவாகிறது. எதிரி தனது முதிய பெற்றோரின் சொத்து தொடர்பான மனுக்கள் ஏன் நிராகரிக்கப்படுகின்றன என்பது குறித்துத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வாக்குவாதம் செய்தாரே தவிர, தலைமை எழுத்தரின் (அ.சா.1) அன்றாடப் பணியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற துர்நோக்கத்துடனோ அல்லது குற்ற மனப்பாங்குடனோ (Mens Rea) செயல்படவில்லை என்பது வெளிப்படையாகிறது. ஒரு குடிமகன் தனது மனுவின் நிலையைப் பற்றிக் கேட்பதில் ஏற்படும் உணர்ச்சிவசப்பட்ட வாக்குவாதம் இ.த.ச பிரிவு 353ன் கீழ் குற்றமாகாது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.4 இ.த.ச பிரிவு 353ன் கீழ் குற்றச்சாட்டின் அஸ்திவாரத்தையே தகர்க்கும் வகையில் நேர முரண்பாடுகள் சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் வெளிவந்துள்ளன:

i) அ.சா.1 மற்றும் அ.சா.2 கூற்றுப்படி, சம்பவம் குறித்து மதியம் 15.00 மணிக்கு (3:00 PM) பவானி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு FIR பதிவு செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது.

ii) ஆனால், அ.சா.3 தனது சாட்சியத்தில் சத்தம் கேட்டு மாண்புமிகு நீதிபதி அவர்கள் வந்த நேரமே மதியம் 03.15 – 03.30 மணி எனக் கூறியுள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:01:59 +0530

iii) சிசிடிவி பதிவுகளை பார்க்கும் போது சம்பவமானது மதியம் 3.45க்கு நடந்துள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. சம்பவம் நடப்பதற்க்கு முன்பே மதியம் 15:00 மணிக்கு (3:00 PM) அரசு ஊழியரைப் பணி செய்ய விடாமல் தடுத்ததாகப் புகார் அளித்து FIR பதிவு செய்யப்பட்டது என்பது தர்க்கரீதியாகச் சாத்தியமற்ற ஒன்றாகும் (Logical Impossibility). இத்தீர்க்க முடியாத நேர முரண்பாடானது, காவல் துறையினரால் முதல் தகவல் அறிக்கை (FIR) முந்தைய நேரமிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் முரண்பாட்டை விளக்கும் விதமாக அரசுத்தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. வழக்கிற்க்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையிலேயே வழக்கின் உண்மைதன்மை குறித்து சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

மேற்சொன்ன காரணங்களினாலும், எதிரி குற்றவியல் விசையையோ அல்லது தாக்குதலையோ பயன்படுத்தவில்லை என்பதாலும், அரசுப் பணியைத் தடுக்கும் குற்ற நோக்கம் எதிரிக்கு இல்லை என்பதாலும், சம்பவ நேரத்திற்கும் FIR நேரத்திற்கும் இடையே உள்ள முரண்பாட்டினாலும் இ.த.ச பிரிவு 353ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க முற்றிலும் தவறிவிட்டது.

12.5 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 351ன் படி ஒரு நபர் செய்யும் செய்கை (Gesture) அல்லது ஆயத்த தயாரிப்பு (Preparation), எதிரிலிருப்பவருக்கு தன் மீது உடனடி வன்முறை/தாக்குதல் பிரயோகிக்கப்படும் என்ற நியாயமான அச்சத்தை (Apprehension of Use of Criminal Force) ஏற்படுத்த வேண்டும். இ.த.ச பிரிவு 351ன் விளக்கவுரையின்படி (Explanation to Sec 351 IPC): "வெறும் வார்த்தைகள் மட்டும் தாக்குதலாகாது" (Mere words do not amount to an assault). ஆனால் ஒரு நபர் பேசும் வார்த்தைகளோடு அவர் செய்யும் செய்கையும் சேர்ந்து அச்சத்தை ஏற்படுத்தினால் மட்டுமே அது தாக்குதலாகும்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:02:03 +0530

12.6 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான குறுக்கு விசாரணைகளை ஆய்வு செய்கையில் எதிரி கை ஓங்கியதாகவோ, அ.சா.1ஐ அடிக்கப் பாய்ந்ததாகவோ, கையில் ஏதேனும் பொருளை வைத்து மிரட்டியதாகவோ அல்லது உடலளவிலான வன்முறையில் ஈடுபட முற்பட்டதாகவோ சாட்சிகள் எவரும் சாட்சியமளிக்கவில்லை. எதிரியின் செய்கை அ.சா.1 (தலைமை எழுத்தர்) மனதில் "தன்னைக் காயப்படுத்தப் போகிறார்" அல்லது "தன் மீது உடனடியாக வன்முறை பிரயோகிக்கப்படும்" என்ற அச்சத்தை ஏற்படுத்தியதாக அ.சா.1 தனது சாட்சியத்தில் கூறவில்லை. எதிரி கை காட்டிப் பேசியதும், கூச்சலிட்டதும் மனுக்கள் எண் (Number) செய்யப்படாததால் எழுந்த ஆத்திரத்தின் வெளிப்பாடே தவிர அது அ.சா.1–ஐ தாக்கும் நோக்கத்திலான செய்கை அல்ல.

12.7 மேலும், இ.த.ச பிரிவு 351 தாக்குதல் பற்றி கூறுகிறது. மேலும், இ.த.ச பிரிவு 350 வன்முறை தாக்குதல் (Criminal Force) பற்றி கூறிறுகிறது. எதிரி அ.சா.1யை தாக்குதல் (Assualt ) அல்லது (Criminal Force) பயன்படுத்தினார் என்று எவ்வித சாட்சியமும் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரி Complaint given to Registrar Vigilance என்று எழுதியது மட்டுமே அ.சா.1யை அலுவலக பணி செய்யவிடாமல் எதிரி செயல்பட்டார் என்பது கூற இயலாது.

12.8 மேலும், அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் பணி நேரத்தில் சத்தம்போட்டு வாக்குவாதம் செய்ததாகவும், கூச்சலிட்டதாகவும், எதிரி ஒருமையில் பேசியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12.9 ஆனால், மாண்புமிகு உச்சநீதிமன்றம் Dhananjay Vs Cabinet Secretary and others என்கிற வழக்கில் Shouting and Threatining someone doesnot amount to assualt என்று கூறியுள்ளது. மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்றத்தீர்ப்பின்படி எதிரி சத்தம்போட்டு வாக்குவாதம் செய்ததாகவும், கூச்சலிட்டதாகவும், எதிரி ஒருமையில் பேசியது மட்டுமே தாக்குதல் என்ற வரையறைக்குள் வராது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:02:07 +0530

12.10 எதிரிதரப்பில் எதிரி தன்னை சாட்சியாக விசாரணை செய்யவேண்டும் என குவிமுச பிரிவு 315ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவானது MP 1 / 2025 ஆக கோப்பிற்க்கு எடுக்கப்பட்டு, MP No. 1/2025 ஆனது கடந்த 12.01.2026 அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அந்த பிரமாண பத்திரிக்கையை எதிரி சாட்சி கூண்டில் ஏறி தன்னை சாட்சியாக விசாரணை செய்து பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யாததால், அந்த பிரமாண பத்திரிக்கையை கருத்தில் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.11 இந்த வழக்கின் அரசு தரப்பு வழக்கானது, எதிரி அ.சா.1யை பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், தகாத வார்த்தையால் பேசியதாகவும், கொலை மிரட்டல் விடுத்தது என்பதை அரசு தரப்பு வழக்காகும். ஆனால், எதிரி குழந்தைவேல் உண்மைகளை மறைத்து பொய்களை சொல்லி போலி ஆவணங்களை தாக்கல் செய்ததை கவனிக்க தவறியதாக கூறியும் போலி ஆவணங்களை நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், அசல் வழக்கை இந்த வழக்கில் நிரூபணம் செய்யப்போவதாகவும் கூறி இந்த வழக்கில் வாதாடிவந்தார். மேற்படி வாதம் குறித்து இந்நீதிமன்றத்தால் எந்த பரிகாரமும் வழங்க இயலாது என்பதால், எதிரி உரிய நீதிமன்றதை அணுகி பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

12.12 **முடிவாக**, இவ்வழக்கின் எதிரி மீதான **இ.த.ச. பிரிவுகள் 294(b), 353, 506(i)ன் படியான** குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு கொடுத்து **எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

13. இவ்வழக்கில் கைப்பற்றுவதற்கான வழக்குச் சொத்து எதுவும் இல்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:02:11 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:02:18 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**

**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| அ.சா. எண். | அரசு தரப்பு சாட்சிகள் | குறிப்பு |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. சாந்தி. | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. ஆடலரசன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திருமதி.கலைசெல்வி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. ராமசாமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | திரு. விஜயகுமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | திரு. கோவிந்தசாமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.7 | திரு.ஆன்ந்த்பட் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.8 | திரு. குமரேசன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.9 | திரு. பிரபு | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.10 | திரு. அமரஜோதி | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.11 | திரு. சுந்தர் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.12 | திரு. செந்தில்குமார் | கணிணி அலுவலர் |
| அ.சா.13 | திரு. சரவணன் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர். |
| அ.சா.14 | திருமதி. மகேஸ்வரி | காவல் உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| அ.சா. எண். | தேதி | ஆவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.03.2022 | புகார் மனு. | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.2 | 24.03.2022 | பார்வை மகஜர். | அ.சா.9 | அசல் |



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.08.11 16:02:14 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | – | DVD – 6 எண்ணிக்கைகள் | அ.சா.12 | அசல் |
| அ.சா.ஆ.4 | 18.08.2022 | இந்திய சாட்சிய சட்ட பிரிவு கீழான சான்றிதழ் | அ.சா.12 | அசல் |
| அ.சா.ஆ.5 | 24.03.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.13 | அசல் |
| அ.சா.ஆ.6 | 24.03.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.14 | அசல் |

<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>: – இல்லை–

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –

<u>குறிப்பு:</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.11 16:02:23 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**